automotive testing expo 2023 INDIA

# பாதுகாப்பாகப் பணிபுரிதல்

**1. அணுகல்**
பில்ட்-அப் மற்றும் ப்ரேக்-டவுன் ஆகியவற்றின் போது அரங்குகளுக்குள் நுழைவது, பாதுகாவலர்களிடம் இருந்து ஒப்பந்ததாரர் மணிக்கட்டுப் பட்டையை (ரிஸ்பேண்டு) பெறுவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

**2. பாதுகாப்பு ஆடை**
பில்ட்-அப் மற்றும் பிரேட்-டவுன் ஆகியவற்றின் போது எல்லா நேரங்களிலும் எளிதில் காணும் வகையிலான கவச உடைகள் மற்றும் பாதுகாப்புக் காலணிகளை அணியுமாறு நாங்கள் வலுவாக அறிவுறுத்துகிறோம்.

**3. புகைப்பிடித்தல்/எச்சில் துப்புதல்**
பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட புகைப்பிடிக்கும் பகுதிகளுக்கு வெளியே புகைப்பிடிப்பது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.
அரங்குகளுக்குள் எச்சில் துப்புவது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

**4. மதுபானம் மற்றும் போதைமருந்துகள்**
எந்த நேரத்திலும் மது மற்றும் போதைப்பொருட்களை உட்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**5. அவசரகால வெளியேறும் வழிகள்**
அவசரகால வெளியேறும் வழிகள் மற்றும் பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டுள்ள அவசரகால இடைவழிகள் எல்லா நேரங்களிலும் தடையின்றி வைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**6. பாதுகாப்பு உபகரணங்கள்**
நீர் தெளிப்பான் அமைப்புகள், தீ அலாரங்கள், தீயணைப்புக் கருவிகள், புகை அலாரங்கள், கதவுகளுக்கான பூட்டுதல் சாதனங்கள் மற்றும் தீத்தடுப்பு அடைப்புப் பலகைகள் போன்ற பாதுகாப்பு உபகரணங்களை எந்த வகையிலும் தடுக்கவோ அல்லது மறைக்கவோ கூடாது.

**7. உயரமான இடங்களின் பணிபுரிதல்**
ஒப்பந்ததாரர்கள் மற்றும் காட்சிக்கு வைப்பவர்கள் அனைவரும் உயரமான இடத்தில் பாதுகாப்பாக பணிபுரியும் பொறுப்பைக் கொண்டுள்ளனர், மேலும் அவர்கள் பணிக்கு மிகவும் பொருத்தமான உபகரணங்களை முன்கூட்டியே திட்டமிட்டுப் பெற்றிருக்க வேண்டும்.

**8. குறைந்தபட்ச வயது**
குழந்தைகளும், 16 வயது வரை உள்ள வளரிளம் பருவத்தினரும் ஒரு சட்டப்பூர்வப் பாதுகாவலர் அல்லது பொருத்தமான மேற்பார்வையாளருடன் மட்டுமே வர்த்தகக் கண்காட்சி மையத்திற்குள் நுழைய முடியும்.

**9. மின்சார நிறுவல்கள்**
சாவடிகளில் உள்ள மின் நிறுவல்கள் தகுதிவாய்ந்த எலக்ட்ரீஷியன்களால் ("B" சான்றிதழ்) மேற்கொள்ளப்பட வேண்டும். மின் நிறுவல் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் தொடர்புடைய உயர் மின்னழுத்த ஒழுங்குமுறைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும், மேலும் தரமான கம்பிகள்/கேபிள்களைப் பயன்படுத்த வேண்டும்.

**10. வெட்டுதல் மற்றும் அரைத்தல் பணிகள்**
வெல்டிங், சால்டரிங், வெட்டுதல், அரைத்தல் ஆகியவை தொடர்பான பணிகள் அல்லது காப்பிடப்படாத தீச்சுடர்கள் அரங்கிற்குள் அனுமதிக்கப்படவில்லை, மேலும் அவை அரங்கங்களுக்கு வெளியே மேற்கொள்ளப்பட வேண்டும்.

**11. அமுக்கப்பட்ட வாயு மற்றும் திரவ வாயு வசதிகள்** அமுக்கப்பட்ட/திரவ வாயுக்களை அரங்குகளிலும், கண்காட்சி மைதானங்களிலும் சேமித்து வைப்பது அல்லது பயன்படுத்துவது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

**12. கழிவு அகற்றல்**
தங்கள் சாவடியை அசெம்பிளி செய்யும் போது, அகற்றும் போது மற்றும் இயங்கும் போது ஏற்படும் கழிவுகளை முறையாகவும், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையிலும் அகற்றுவது காட்சிக்கு வைப்பவரின் பொறுப்பாகும்.

**13. நிகழ்விட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்**
அனைத்து ஒப்பந்ததாரர்களும் காட்சிக்கு வைப்பவர்களும் "சாவடி அலங்காரத்திற்கான நிகழ்விட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை" படித்துப் புரிந்துகொண்டதை உறுதிசெய்திருக்க வேண்டும்.

*பொறுப்புத் துறப்பு:*
***இந்த விதிகளை காட்சிக்கு வைப்பவரால் நியமிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் தகவல்கள் மற்றும் இணையவழி எக்ஸிபிட்டர் கையேடு ஆகியவற்றுடன் சேர்த்து படிக்க வேண்டும்.***
***மேலும் விவரங்களுக்கு மற்றும் இணையவழி எக்ஸிபிட்டர் கையேட்டை அணுகுவதற்கு, தயவுசெய்து உங்கள் கண்காட்சி சாவடியை அமைக்கும் வாடிக்கையாளரைத் தொடர்பு கொள்ளவும்.***